[10th August 1963

திரு. கே. பொன்னையா : தொழிலாளர்கள் வாங்கும் போனஸில் ஒரு பகுதியை மீதம் செய்யவேண்டுமென்று முதலாளிகள் சொல்கிறார்கள். அதுவும் இத்திட்டத்தில் சேருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது புதிய திட்டம். யார் யார் கொடுக்க வேண்டும், யார் யாருக்கு விலக்குண்டு என்பது விளக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கட்டாய சேமிப்புத் திட்டத்தை சட்டமாகக் கொண்டுவந்து சட்டம் இயற்றிய பிறகு, சட்ட விரோதமாகக் கட்டாய சேமிப்பு நிதி கேட்பது சரியல்ல என்று கிளர்ச்சி செய்யும் அரசியல்வாதிகள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசாரம் செய்வது ஒரு விஷயம். அதை ஆட்சேபிப்பதற்கில்லை. சட்டவிரோதமாக யாராவது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ப்ராவிடன்ட் பண்டிலிருந்து கடன் கொடுப்பது போல் இந்தக் கட்டாய டெப்பாசிட் தொகையிலிருந்தும் கடன்கள் வழங்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு : நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் கட்டாயச் சேமிப்புத் திட்டமா ? கட்டாய வரி விதிப்புத் திட்டமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி அங்கத்தினர் அவர்கள் தனக்கு வேண்டிய விளக்கத்தை வைத்துக் கொள்ளலாம். இக்கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : கட்டாயச் சேமிப்பு நிதி ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் ஒன்றும் உத்திரவு இடவில்லை.

ஹரிஜன காலனிகள் (தென்னாற்காடு).

** 83 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :* கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தென் கடலூர் மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்காக கட்டப்பட்ட காலனி வீடுகள் குடிபுகுமுன் விழுந்துவிட்டனவா ?

(இ) எவ்வளவு காலனிகளில் எவ்வளவு வீடுகள் அவ்வாறு சேதமாயின ? அதற்குக் காரணமென்ன ?

10th August 1963]

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(a) No, Sir, and

(b) Does not arise.

திரு. செ. மாதவன்: இப்பொழுது ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்குப் பணம் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டதா? அதற்குப் பதிலாக ஹரிஜனங்களுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பூரணமாக எடுத்துவிடவில்லை. கூட்டுறவு முறையிலே காலனிகள் கட்டலாம் என்று யோசித்தோம். ஆனால் நெருக்கடி காரணமாக அந்த யோசனை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. பொன்னையா: ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு வீட்டு மனை வாங்கிக் கொடுத்து, அஸ்திவாரம் போட்டு, மற்றபடி டவுன் பிளானிங் எல்லாம் செய்து கொடுக்கக்கூடிய ஒரு பாலிஸி சர்க்காரிடம் இருந்ததே? அது என்னவாயிற்று?

கனம் திரு. பூ. கக்கன்: அஸ்திவாரம் போட்டு இடம் கொடுப்பதற்குத்தான் யோசித்தோம். அதற்கும் அதிகமாக செலவு ஆகிறது. அதனால் இடம் மட்டும் வாங்கிக்கொடுக்கவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது.

திரு. க. தா. பெருமாள் ராஜு: கோபிசெட்டிப்பாளையம் தாலுகாவில், சத்தியமங்கலத்தில் உக்ரம் என்ற ஊரில் ஹரிஜனங்களுக்கு 60 வீடுகள் கடன் தவணையின் பேரில் கட்டிக் கொடுக்கப்பட்டவை நல்ல முறையில் இல்லை, விழுந்துவிட்டன. ஆனால், கடன் தொகையை வசூலிக்க நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். அதை வஜா செய்ய சர்க்கார் முன்வருமா? அல்லது, அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை ரிப்பேர் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் கேள்வி தென்னாற்காடு ஜில்லாவைப் பற்றியது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

திரு. சி. பொன்னுசாமி: ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் மத்திய சர்க்கார் மானியத் தொகை எவ்வளவு? மாநில சர்க்கார் மானியத் தொகை எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன்: இப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூபாய் 1,000 கொடுக்கப்படுவதில் ரூபாய் 750 இனமாகவும், ரூபாய் 250 கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அந்த ரூபாய் 750-ல் பாதி, ரூபாய் 375 மத்திய சர்க்கார் சப்ஸிடியாகக் கொடுக்கிறார்கள்.

[10th August 1963

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன இலாகாவில் ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தாசில்தார், ஒரு பிர்க்காவுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார்கள். அவர்களால் ஹரிஜன நல இலாகா வேலையை முழுவதும் சரிவரச் செய்ய முடியவில்லை.. ஆகவே, ஒரு டெப்யூடி தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு ஒரு ப்யூன் ஆகிய உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன நல இலாகா வேலையை ஜில்லாதோறும் கவனிப்பதற்கு எற்கனவே தாசில்தார் கிரேடில் உத்தியோகஸ்தர்கள் போடப்பட்டிருந்தார்கள். எல்லா ஜில்லாக்களுக்கும் டெப்யூடி கலெக்டர் கிரேடில் அதிகாரிகள் இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கேயெல்லாம் அதிக உத்தியோகஸ்தர்களுக்குத் தேவை இருக்கிறதோ, தாசில்தார் டெப்யூடி தாசில்தார் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தேவை இருக்கிறதோ அதை எல்லாம் கவனித்து ஜில்லா கலக்டரைக் கேட்டு அனுமதி வாங்கிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : இப்பொழுது ரூரல் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் ஹரிஜனங்களுக்கு விடு கட்டிக்கொள்ளுவதற்கு சில பகுதிகளில் மட்டும் கடன் கொடுக்கப்படுகிறது. எல்லா யூனியன்களிலும் கேட்கக்கூடியவர்களுக்கெல்லாம் கடன் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தின்கீழ் இடம் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிராமாந்திர விடு கட்டும் திட்டம் ஹரிஜனங்களுக்கு மட்டும் இல்லை. ஜாதி இந்துக்களுக்கும் உண்டு. இந்தத் திட்டத்தின் கீழே எல்லோருக்கும் கடன் கொடுப்பதற்கு இப்பொழுது அரசாங்கத்தின் நிதி நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பது கனம் அங்கத்தினருக்கே தெரியும்.

Chief Professor in Tamil in Presidency College

* 84 *Q.*—Sri N. MAHALINGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras Public Service Commission called for interview for the posts of Chief Professor in Tamil in the Presidency College and selected any person;

(*b*) the qualifications prescribed under the rules; and

(*c*) the qualification of the selected candidate ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes Sir.

(*b*) The qualifications prescribed are :—

(i) The first or second-class degree of M.A. or B.A. (Hons.) or B.Sc. (Hons.) of a University in the State of Madras in the subject specified in respect of which application is made or any other qualification, Indian or foreign, equivalent to it ;

(ii) the subject should have been taken as the main subject for the degree course.